பக்கம் 124

வரும் 18-21

//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.12/2019**

**prosecution witness: PW-8**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**Accused present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோதிபாசு | ஜாதி | : | |
| க/பெ. | : | வி-கோ- அய்யான் | தொழில் | : | காவல் ஆய்வாளர் நரிக்குடி வட்டம் |
| கிராமம் | : | | சமயம் | : | அருப்புக்கோட்டை |
| தாலுகா | : | | வயது | : | |

<u>**27.09.2024**</u>

<u>**முதல் விசாரணை:-**</u>

நான் தற்சமயம் விருதுநகர் மாவட்டம் நரிக்குடி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 13.03.2018 ம் தேதி நான் நிலையப் பொறுப்பில் இருந்தபோது இராமேஸ்வரம் புதுரோடு சுனாமிகுடியிருப்பைச் சேர்ந்த வேலு மனைவி பிரியா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.10/18, பிரிவுகள்.4 of TNPHW Act ஆக வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.

2. புகார்மனுவினையும், முதல் தகவல் அறிக்கையும் கனம் நீதித்துறை நடுவர்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். கடந்த 13.03.2018 ம் தேதி இவ்வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 13.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான சசிக்குமார், சபரீஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.**

27/9/24

3. பின்னர் சாட்சிகளை 161(3) குவிமுச படி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்தபோது எதிரியானவர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன்ஜாமீன் பெற்றுள்ள தகவல் கிடைத்ததால் கைது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

4. இவ்வழக்கின் சம்பவ இட சாட்சிகள் மற்றும் நான் விசாரணை செய்த சாட்சிகள் இவ்வழக்கின் வாதி கொடுத்த புகாரின் படியும், என்னுடைய ரகசிய புலன்விசாரணையும் படியும் எதிரியானவர் குற்ற செயலில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது பிரிவு. 4 of TNPHW Act படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்தேன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1.இரோமேஸ்வரம் புதுரோடு சுனாமி குடியிருப்பானது தனுஷ்கோடி காவல்நிலையத்தில் இருந்து 10 மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். இராமேஸ்வரம் சேராங்கோட்டை, தெற்குகரையூர் பகுதியானது தனுஷ்கோடி காவல்நிலையத்தில் இருந்து 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். இ இராமேஸ்வரம் சேராங்கோட்டை, தெற்குகரையூர், மீனவர் காலணி வடக்கு ஆகிய மூன்று பகுதிகளும் இராமேஸ்வரம் துறைமுகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்டது என்றால் சரிதான்.

2. சம்பவம் நடைபெற்று 23 மணிநேரம் காலதமாதமாகத்தான் புகார்தாரர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் 14-ல் உள்ள கையெழுத்தும், புகாரிலுள்ள கையெழுத்தும் மாறுபாடாகா உள்ளது என்றால் இல்லை ஒற்றுமையாகத்தான் இருக்கிறது. அந்த கையெழுத்து மாறுபாடாகா உள்ளது நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் பிரியாவிடம் எப்போது எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் 13.03.2018ம் தேதியன்று காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தேன் எத்தனை மணிக்கு என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது.

3.புகார்தாரரும், எதிரியும் ஒரே சமூகம், ஒரே பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். புகார்தாரருக்கும், எதிரிக்கும் ஏற்கனவே முன்பகை இருக்கிறது, அந்த பகையை மனதில் வைத்து கொண்டு எதிரியை பழிவாங்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் புகார்தாரர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக வழககு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோல் சம்பவ சாட்சிகளான உமயராஜ், யுவராஜ் ஆகியோர்களை எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்று என்னால் சொல்லமுடியாது. உண்மையிலேயே சாட்சிகளை முறையாக விசாரணை செய்திருந்தால் நேரத்தை குறிபிட்டு சொல்லமுடியும் என்றால் சரியல்ல.

4. சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வழகிற்கு தோததாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவம் நடைபெற்றிருந்தால் அன்றைய தினமே புகார்தாரர்

27/9/24

காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெறாத காரணத்தினால் தான் அன்றைய தினம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

5. முதல் தகவல் அறிக்கையினை கடந்த 16.03.2018 ம் தேதியன்று காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அந்த காலதாமதத்திற்கான காரணம் எதுவும் நீதிமன்றததில் சொல்லவில்லை என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் சொல்லியுள்ள பிரிவுக்கு ஏதுவாக சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழககிற்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

27/9/24

Taken down by me in open court read over interpreted to the witness in the presence of the accused/accused's pl... was admitted by the witness to be correct

27.9.24

Judicial Magistrate
Rameswaram